# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 91/மா/2023**
**நாள் : 11.05.2023**

திரு. N. தமிழரசு,
சென்னை–600 001.

– முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம்–4,
பெருநகர சென்னை மாநகராட்சி.

– எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, ஜார்ஜ் டவுன், பாரீஸ், ஆர்மீனியன் தெரு, எண்.103/50 என்ற முகவரியில் வசிக்கும் திரு. N. தமிழரசு என்பவரின் 23.01.2023 நாளிட்ட மனு 27.01.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 91/மா/2023 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

<u>ஆணை</u>

பெருநகர சென்னை மாநகராட்சி, ஜார்ஜ் டவுன், பாரீஸ், ஆர்மீனியன் தெரு, எண்.103/50 என்ற முகவரியில் வசிக்கும் திரு. N. தமிழரசு என்பவரின் முறையீட்டு மனுவில் :

I have made a online complaint dated 22.10.2022 vide No.2022-4271KC, regarding an illegal and unauthorized construction at No.68/12, K.H.Road, Korukkupet, Chennai – 600 021 and continued to be followed up but not responded within the time limit. On 29/10/2022 Assistant Engineer Div 47, Zone 04 says that "The above site was Inspected the Further Action will be taken thanking you." and closed my complaint.

After that I filed online complaint dated 04.11.2022 vide No.2022-223 WDO based on my previous online complaint (vide No.2022-4271 KC) for which no response was received within the expiry date. However, On 07.11.2022 the Assistant Engineer Div. 47, Zone 04 says that "The Above Site was Inspected the Further Action will be taken thanking you" and closed my complaint.

Since the construction work was still in progress and not found action was taken so I filed another online complaint dated 20.11.2022 vide No.2022-609 KHC based on my previous complaint (Vide No.2022-223 WDO) for which no response was received within the expiry date, However on 12.12.2022 the Assistant Engineer Div 47, Zone 04 says that "The Above Site was Inspected the Further Action will be taken. Thanking You" and closed my complaint.

While, this seems like the concerned officials are indirectly encouraging these types of activities. Therefore, I request you to direct them to take necessary action on my complaint.

Further, I request you take appropriate action against the concerned officials for not action taken on my complaint within the time line.

**மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் - 4ன் மண்டல அலுவலரிடம் 13.2.2023 நாளிட்ட கடிதத்தில் கோரப்பட்டது.**

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-4ன் மண்டல அலுவலர் 01.03.2023 நாளிட்ட தனது அறிக்கையில்:-**

மேற்கண்ட மனுதாரரின் புகார் மனு குறித்து தெரிவிப்பது யாதெனில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-4 – பகுதி 11- வார்டு -47க்கு உட்பட்ட கத்திவாக்கம் நெடுஞ்சாலை கதவு எண்.68/12ல் கட்டப்பட்டு வரும் கட்டிடம் பெருநகர சென்னை மாநகராட்சியிடம் கட்டிட அனுமதி (B.A.WDCN04/0881/2021) பெறப்பட்டுள்ளது. இந்த கட்டிட அனுமதியில் உள்ள விலகல் கண்டறியப்பட்டு அதற்கு Stop Work Notice தாக்கீது நாள்:07.12.2022, Lock and Seal and Demolition Notice தாக்கீது நாள்: 11.01.2023 மற்றும் De-Occupation தாக்கீது நாள்:28.02.2023 வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என தங்களுக்கு தெரிவித்துகொள்ளப்படுகிறது.

**2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 27.04.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 13.04.2023** நாளிட்ட அழைப்பாணைகள் **அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 27.04.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4 கத்திவாக்கம் நெடுஞ்சாலையில் கதவு எண் 68/12ல் கட்டப்பட்டு வரும் கட்டடம் பெருநகர சென்னை மாநகராட்சியின் அனுமதியின்றி கட்டப்பட்டு வருகிறது. சாலையை ஆக்கிரமித்து கட்டப்பட்டு வரும் மேற்கண்ட கட்டடத்தால், அவசர நேரத்தில் அங்குள்ள அரசு மகப்பேறு மருத்துவமனைக்கு செல்லும் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். மேலும், மேற்கண்ட மருத்துவமனைக்கு செல்லும் அவசர கால ஊர்திக்கு மருத்துவமனைக்கு விரைவில் செல்ல அங்கு வழியில்லை.

இந்நேர்வு தொடர்பாக மாநகராட்சி மண்டல அலுவலகத்தில் புகார் மனுக்கள் அனுப்பியும் மாநகராட்சி அலுவலர்களால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே மேற்கண்ட அனுமதியின்றி, பொதுமக்களுக்கு சிரமத்தை ஏற்படுத்தும் வகையில் கட்டப்பட்டு வரும் மேற்கண்ட கட்டடத்தின் மீது விதிகளின்படி நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். இந்நேர்வு தொடர்பான புகைப்பட நகல்களையும் இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் உதவி பொறியாளர் 02.05.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்.**

"மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4 கத்திவாக்கம் நெடுஞ்சாலை கதவு எண் 68/12ல் கட்டப்பட்டு வரும் கட்டடம் வரைபட அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ளதைத் தொடர்ந்து Stop work notice தாக்கீது 7.12.2022 அன்றும் Lock and Seal and Demolition Notice தாக்கீடு 11.1.2023 அன்றும் மேலும் De-occupation Notice 28.2.2023 அன்றும் கட்டட உரிமையாளருக்கு வழங்கப்பட்டுள்ளது எனவும், Demolition Notice விரைவில் வழங்கப்படும் என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்'' எனத் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், மண்டலம்-4ன் மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்றத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்கண்ட விவரங்கள் தெரியவருகின்றன.

மனுதாரர் திரு. N. தமிழரசு பெருநகர சென்னை மாநகராட்சி மண்லம்-4, கத்திவாக்கம் நெடுஞ்சாலையில் கட்டப்பட்டு வரும் கட்டடம் பெருநகர சென்னை மாநகராட்சியின் அனுமதியின்றி கட்டப்பட்டு வருவதாகவும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-4 அலுவலர்கள் தன்னுடைய மனுவின் மீது நடவடிக்கை எடுக்கவில்லையெனவும் எனவே தன் மனு மீது உரிய விசாரணை நடத்தி, உத்திரவு பிறப்பிக்குமாறு கோரியுள்ளார்.

2. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் -6ன் செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோர் மேற்குறிப்பிட்ட கட்டடம் பெருநகர சென்னை மாநகராட்சியின் அனுமதி (BA/WDCNo4/0881/2021) பெற்றுள்ளது எனவும், ஆனால் கள ஆய்வில் கட்டிட அனுமதியில் உள்ள விலகல் கண்டறியப்பட்டு அதற்கு 7.12.2022 அன்று Stop Work Notice தாக்கீதும், 11.1.2023 அன்று Lock and Seal and Demolition Notice தாக்கீதும், 28.2.2023 அன்று De-Occupation தாக்கீதும் வழங்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்கள்.

மனுதாரர் இணையதளத்தின் வாயிலாக 22.10.2022 4.11.2022, மற்றும் 25.11.2022 முறையே புகார் மனுக்களை பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 4ற்கு அனுப்பியுள்ளார். பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4ன் அலுவலர்கள் கள ஆய்வில், அக்கட்டிடத்தில் விலகல் இருப்பதை கண்டறிந்து, 7.12.2022 அன்று அக்கட்டிடத்திற்கு Stop Work Notice தாக்கீது வழங்கி அதன்பிறகு தொடர் நடவடிக்கை எடுத்துள்ளதை இம்முறைமன்றம் வரவேற்கிறது.

இருப்பினும், ஆய்வில் கண்டறியப்பட்ட அக்கட்டிட அனுமதி விலகல் குறித்து அவை கட்டட உரிமையாளரால் சரி செய்யப்பட்டனவா என்று உறுதி செய்து கொள்ளுமாறு இம்முறைமன்றம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-4ன் உதவி ஆணையருக்கு பரிந்துரை செய்து ஆணையிடுகிறது

2023–ஆம் ஆண்டு மே திங்கள் 11–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. N. தமிழரசு,
   வழக்கறிஞர்,
   எண்.103/50, ஆர்மீனியன் தெரு
   பாரீஸ், ஜார்ஜ் டவுன், சென்னை – 600 001.
2. மண்டல அலுவலர்,
   மண்டலம் - 4, பெருநகர சென்னை மாநகராட்சி,
   226, திருவொற்றியூர் நெடுஞ்சாலை
   பழைய வண்ணாரப்பேட்டை,
   சென்னை – 600 021.
3. அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
4. துணை ஆணையர் (பணிகள்)
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை சென்னை – 600 003.
5. கண்காணிப்பு பொறியாளர்,
   மழைநீர் வடிகால்துறை,
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

நகல்.

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

உதவிப் பதிவாளர்.